ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1804/17 - 2013 අප්‍රේල් මස 03 වැනි බදාදා - 2013.04.03

*1804/17 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 03 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I)- பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டம்*

*அரசியலமைப்பின் 44 ஆம் உறுப்புரையின் (2) ஆம் பந்தியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதியினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*சனாதிபதி.*

கொழும்பு,
*2013, ஏப்பிறல் 03.*

**ஒழுங்குவிதிகள்**

*1.* இந்த ஒழுங்குவிதிகள் 2013 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க, இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்கு விதி என எடுத்துக் காட்டப்படலாம்.

*2.* இலங்கை நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற இயைபு முறைப் பட்டியல் தலைப்பு இலக்கம் 87.02, 87.03, 87.04 மற்றும் 87.05 என்பனவற்றின் கீழ்வரும், பாவிக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் அனைத்தும் முன்-கப்பலிறக்கல் பரிசோதனை ஒன்றிற்கு உட்படுவதுடன், அதற்கென நிதி, திட்டமிடல் அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட பரிசோதகர்களினால் ஏற்றுமதி பரிசோதனைச் சான்றிதழும் வழங்கப்படுதல் வேண்டும்.

*3.* மேற்குறித்த ஏற்றுமதிப் பரிசோதனைச் சான்றிதழுடன் கீழ் குறிப்பிடப்படுபவையும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும் :-

(அ) வாகனப் பதிவு இரத்துச் செய்யப்பட்ட சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று. இது லெமினேட்டிங் செய்யப்பட்டு மற்றும் மேலெழுந்த அழுத்திப் பதித்த அலுவலக முத்திரை இடப்பட்டிருத்தல் வேண்டும்.

(ஆ) பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட வாகனத்தின் உதிரிப் பாகங்கள் உள்ளடங்கலாக வாகனத்தைப் பற்றிய பூரண விளக்கங்களை உள்ளடக்கிய நிலமை அறிக்கையொன்று.

*4.* மேற்குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதி 3(அ) மற்றும் 3(ஆ) இல் குறிப்பிடப்பட்ட ஆவணங்களும் ஆங்கில மொழிபெயர்ப்புடன் கூடியதாக இரத்துச் செய்யப்பட்ட பதிவுச் செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதியும் இதனகத்துப் பின்னர் நாணயப் பத்திரத்தின் கீழ் தேவைப்பட்ட ஆவணங்களின் பகுதியாகவிருத்தல் வேண்டும்.

*5.* இரத்துச் செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழின் மூலப் பிரதி அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு மற்றும் ஒழுங்குவிதி 3(அ) மற்றும் 3(ஆ) என்பனவற்றில் குறிப்பிடப்பட்ட ஆவணங்கள் அல்லது அதன் பிரதி என்பனவற்றில் நாணயப் பத்திரங்கள் திறக்கப்பட்ட உள்ளூர் வங்கி முத்திரை மற்றும் ஏற்றுமதி செய்யும் நாட்டிலுள்ள தொடர்புடைய வங்கி என்பனவற்றின் முத்திரை இடப்படுதல் வேண்டும்.

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

6. ஏற்றுமதியாளர்கள், இறக்குமதியாளர்கள் அல்லது ஏனைய ஆட்கள் எவரினாலும் நேரடியாக வழங்கப்பட்டால், வர்த்தக வங்கிகள் அவற்றுடன் தொடர்பான வங்கிகளினால் நேரடியாக வழங்கப்படும் அத்தகைய ஆவணங்கள் மாத்திரமே ஏற்றுக் கொள்ளப்படுவதுடன் இரத்துச் செய்யப்பட்ட வாகனப் பதிவுச் சான்றிதழ்கள் அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்புக்கள் மற்றும் ஏற்றுமதி பரிசோதனைச் சான்றிதழ்களுக்கு முத்திரையிடப்படலாகாது.

7. **அதிகாரபூர்வமானது என்பதை உறுதிப்படுத்தல்:**

7.1 ஒழுங்குவிதி 3(அ) மற்றும் 3(ஆ) என்பனவற்றில் குறிப்பிடப்பட்ட ஆவணங்களானவை இதனகத்துப் பின்னர் சுங்கத் திணைக்களத்தினால் மோட்டார் வாகனமொன்றினை விடுவிப்பதற்கு தேவையான ஆவணங்களில் பகுதியொன்றாக இருக்கும்.

08. **பொருள்கோடல்:**

8.1 அங்கீகரிக்கப்பட்ட பரிசோதகர்கள் என்பது பின்வருமாறு பொருள்படும்.

(i) யப்பானிலிருந்தான இறக்குமதிகளுக்கு - யப்பான் வாகன மதிப்பீட்டு நிறுவனம் (மின் அஞ்சல் முகவரி: mail@jaai.or.jp

(ii) யப்பானிலிருந்தான இறக்குமதிகளுக்கு - யப்பான் ஏற்றுமதி வாகனப் பரிசோதனை நிலையம் கம்பனி லிமிடெட் (JEVIC) (மின் அஞ்சல் முகவரி: info@jevic.com)

(iii) யப்பானிலிருந்தான இறக்குமதிகளுக்கு - யூஸ்ட் கார் ஸிஸ்டம் ஸொலுசன் கம்பனி லிமிடெட் (USS Co.Ltd.) (மின் அஞ்சல் முகவரி: tokyo@ussnet.co.jp)

(iv) ஏனைய அனைத்து நாடுகளிலிருந்தான இறக்குமதிகளுக்கு - வெரிடாஸ் பணியகம் (மின் அஞ்சல் முகவரி: itd.sgp@sg.bureauveritas.com)

(v) வெரிடாஸ் பணியகம் இல்லாத நாடொன்றில் அல்லது வேறு காரணங்களுக்காக நிதி அமைச்சின் செயலாளரினால் அல்லது இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரிசோதனை அதிகாரி.

8.2 இந்த ஒழுங்குவிதியின் நோக்கத்திற்காகப் பாவிக்கப்பட்ட மோட்டார் வாகனங்கள் என்பது மோட்டார் வாகனமொன்று அதன் மூல/ஏற்றுமதி நாடொன்றில் பதிவு செய்யப்பட்டுள்ளது என்பது பொருளாகும்.

2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 21 ஆந் திகதிய 1454/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2006 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டதுமான இறக்குமதிகள், ஏற்றுமதிகள் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதி இத்தால் இரத்துச்செய்யப்படுகிறது.

04-496

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.